தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்

சென்னை-6

ந.க.எண். 21243 / சி3 / இ1 / 2023 நாள்.12 .09.2023

பொருள்: பள்ளிக் கல்வி 2022-23ம் ஆண்டு துறை மாறுதல் பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் - பெருநகர சென்னை மாநகராட்சி துறையின் கீழ் இயங்கும் பள்ளிக்கு துறை மாறுதலில் செல்ல விண்ணப்பங்கள் கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் -சார்பு.

பார்வை:
1)அரசாணை (நிலை)எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021
2)அரசாணை நிலை எண்.48 பள்ளிக் கல்வித் பக5(2) துறை நாள்.1.3.2023
3)சென்னை-3 கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.இ4/இ3/1109/2023 நாள்.4.9.2023

-0-

பெருநகர சென்னை மாநகராட்சி துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் உள்ள 190 காலிப்பணியிடங்களுக்கு அலகு விட்டு அலகு/துறை மாறுதல் மூலம் சென்னை மாவட்டம் மற்றும் பிறமாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரிய விருப்பம் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் EMIS இணையதளத்தில் 11.9.2023 முதல் 30.9.2023 வரை தங்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்திடுமாறு பார்வை-3ல் காணும் கடிதம் வாயிலாக பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பெருநகர சென்னை மாநகராட்சி துறையின் கீழ் இயங்கும் பள்ளிக்கு துறை மாறுதல் மூலம் பணிபுரிய விருப்பம் உள்ள அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் உரிய தடையின்மைச் சான்று பெற்றவர்கள் (ப.க.இ.நரால் தடையின்மைச் சான்று பெற்றுள்ளவர்கள்) கல்வி தகவல் மேலாண்மை முறைமையில் EMIS

இணையத்தில் 11.9.2023 முதல் 30.9.2023 வரைக்குள் துறை மாறுதல் கோரும் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்திட தங்கள் ஆளுகைக்குட்பட்ட அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளுக்கு தகவல் தெரிவித்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

13/9/23

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

13/9/2023

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலமாக)

நகல்: கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகை, சென்னை–3 தகவலுக்காக